# பசுபதீசுரர்

# பாமாலை

முதலியன

தே. பெரியசாமி பிள்ளை.
தருமாதிகாரி,
சைவசித்தாந்த சபை, உறையூர்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீஜ்ஞானசம்பந்தகுருப்யோநம:

கருவூர்

# ஸ்ரீபசுபதீசுரர்பாமாலை

# திருவாணிலைநாதர்போற்றிப் பதிகம்

# ஸ்ரீசௌந்தரநாயகி தசகம்.

இவை

உறையூர்ச் சைவசித்தாந்த சபை தனசாலாதிபரும்
கு. தா. லாலாப்பேட்டைச் சித்தாந்த ஞானப்பிரகாசசபைத்
தலைவருமாகிய ஷை உறையூர்

**தே. பெரியசாமிபிள்ளையாலியற்றப்பெற்று**

நொச்சியமென்று வழங்கும் எச்சிலிளமர்ப்பதி

**நா. ஆதிமூலவாண்டையாரவர்கள்**

விருப்பத்தின்படி பூவாளூர் சைவசித்தாந்த சமையாபிமான
சங்கத்தலைவரும் இந்நூலாசிரியர் மாணாக்கருமாகிய
ஷை பூவாளூர்

**நா. சு. மு. செல்வக்கணபதி செட்டியாரால்**
பதிப்பிக்கப்பெற்றன.

ஸ்ரீரங்கம்:
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.
1911.

உ

# சிறப்புப்பாயிரம்

இது

ஆரணிநகரசமஸ்தானவித்வானும் அத்துவிதசித்தாந்தமஹோ
த்தாரணரும்-மதுரைத்தமிழ்ச்சங்கப்புலவரும்-சென்னை
இராசாங்கத்தாராலும் மாயாவாதத்வம்சகோளரி
யென்றுறுதிபடுத்தப்பெற்றவருமாகிய
யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி
மஹாவித்வான்-சதாவதானம்

## ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற்பிள்ளையவர்களுரைத்தது.

மறையூரும்பதத்தனெடுமறையூருமதளையன் மதிதயாவி,
னிறையூருமுளத்தன் வரையிறையூருங்கரத்தனைந்து நிறத்
தானஞ்சுக், கறையூருங்களத்தனங்கியிறையூருங்குளத்தனொரு
காந்திக் காந்தை, உறையூரொன்றறிஞர்புகழுறையூரினுழவர்
குலத்துவந்தானன்றோ (க)

ஆர்சிறிய சாமிகளையனுகானம் பெருஞ்சாமிக்கன்பனிலத்,
தேர்விரியகல்த்தேவராயசுதன் சித்தாந்தவின்பார்கல்வி, ஓர்
வரியகலைகற்றோன் சிவனடியார் திறத்தொழுகுமுண்மை
நேயன், பேர்பெரியசாமியெனும் பாவணன் சீருலகிற்பிர
க்கமன்றே. (௨)

மன்னுலகிற்கலந்தொன்றாய் வேறுணவத்துவிதமாண்பினை
யுந்திங், கென்னினுமேயெனக்கினியபதி கருவூரமர்ந்தருளு
மிறைவன்மீது, துன்னியசொற்சுவையருத்தச் சுவையெல்லாம்
பொலிந்திலங்கத்துறும் பாமாலை, நன்னயப்போற்றிப்பதிகஞ்
சௌந்தரநாயகிதசக நவின்றன்மாதோ. (௩)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீஜ்ஞானசம்பந்த குருப்யோநம:

# கருவூர்ப் பசுபதீசுரர் பாமாலை.

விநாயகர் (கலி விருத்தம்).

எவன்பிர ணவப்பொரு ளெனமறை யியம்புறு,
*மெனுரு விருதிணைக் கிறையென விலக்குறு, மெவ
னடி யவர்வினை யெறிசிவ னருள்சுத, னவனிரு சரண்
டொழு தடைகுவங்கதியே.

---

* இருதிணை—உயர்திணை, அஃறிணையென்பன. அவைக்கு இறையென இலக்குறலாவது—அத்திணைப் பொருள் வடிவங்களைத் தம்முருவிற்கொண்டு தெரித்தல். என்னை? விநாயகனார் திருமுகம் அஃறிணைப் பொருளான யானை முகமாகவும், ஏனைய வுறுப்பு உயர்திணைப் பொருளான தேவபூத வடிவங்களாகவும் கோடலான் என்க.

சுப்பிரமணியர் (ஷெ-ஷே று).

* பமர மேலெழு பௌவஞ் சுவற்றிடச், சமர மார்
வடி வேலின் றாங்குமா, றமர ரேத்துறு மானிலை
யைகிய, குமரவேளைக்குறித்து வழுத்துவாம்.

சமயாசாரிய சுவாமிகள், தலநாயன்மார், சந்தானா
சாரிய சுவாமிகள் வணக்கம்.

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்).

சைவநெறி தழைக்கவரு சிவஞானக் கன்றுடனே
சார்ந்தநான்கு, தெய்வவருளாளரெனுஞ் சகக்குரவர்
புகழ்ச்சோழர் சிவநேசர்க்கே, யெய்யுமின லெறிந்த
தருளு மெறிபத்தர் திருவிசைப்பா வியற்றுமூர, ருய்
யவரு மெய்கண்டார் முதற்குரவர் தமைநினைந்திங்
குய்ந்தே வாழ்வாம்.

நூல்.

(எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

மனமொழி யுடல மூன்றுநின் றனையே வயங்குற
நினைந்துருகிடவுங், கனிவினின் புகழேபுரிந்துபா டவு
நற்களிப்பினின் பணிகளே செயவு, மினிதெனக் கரு
ள்வை யெனிற்பிறப் பெளியேற் கெத்துணை யெய்தினு
மிகழே, னனகநற் கனகச் சினகரக் கருவூரானிலைப்
பசுபதீச்சுரனே. (க)

* பமரம் மல வாதனையா னேரு மறிவின்மை. எனவே
யவிச்சையென்றபடி. எழுபௌவம்-எழுவகைப் பிறவிக்கடல்.

இருமருப் புரற்காற் றழைசெவிக் கரியை யியக்கு றும்பாகினொடெறிந்தே, திருவமிக் குடைநம்மடியவர்க் கின்பஞ் செய்வித்தோன் கொல்லிவ னென்ன, வெருவிலேனாய வெய்துறுங்கொடிய வினையினேன்றனக் கருள் வழங்கா, தருவருப்பாயே லென்செய்வேன் கருவூ ரானிலைப் பசுபதீச் சுரனே. (௨)

நாரணன் கமலநாண்மலர்ப்பொகுட்டினனியமர்நான்முகன் வெள்ளை, வாரணன் முன்னாமுயிரெவற்றினையும் வயங்குறக்காரியப்படுத்துங், *காரணனாய கடவுணின்னலது கடையனேன் கருதுவேன் கொல்லோ, வாரண வொலிமிய மல்குறுங் கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (௩)

†கரபுரங் கோவூர் முசுகுந்த நகரங் கடம்பெறிந்தான்பதி பிரம, புரமனை யூர்பாற்கரபுர முனமாபுரங் கற்பபுரிசண் மங்கலக்கேத், திரம்வஞ்சிவீர சோழமாபுர முற்றிருப்பெயர்பல கொடுதிகழு, மரகரமுழக் கோடன் பர்சூழ்கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (௪)

---

* காரியப்படுத்துங் காரணன் என்பதை "சர்வமிதம் ப்ரஹ்ம விஷ்ணுருத்ரேந்திராஸ்தே" என்றற்றொடக்கத்த அதர்வசிகைச் சுருதி வசனங்களாற் காண்க.

† இப்பெயர்களின் காரணங்களையெல்லாம் கருவூர் மான்மியம் என்னும் நூலிற் காண்க.

பொறிமருமார் பத்தண்ணன் முன்னுகப் புகலுயி
ரெவற்றிற்கு நீயே, * யிறையென மறைமுற்கலையியம்
புண்மையெம் பேனோர்க்கறிவிப்பானினைந்தோ, பறி
நகர்ச்சுரரான் பரவவித்தலத்திற் பசுபதியென்ன வீ
ற்றிருப்பா, யறிவிலா மறவருளம்புகாக் கருவூரானி
லைப் பசுபதீச்சுரனே. (ரு)

வடிகெழுமிலை வேல்வடுகிர்க் கண்ணார் மயலெனு
மதுவினை மடுத்தே, படிமிசையெளியேன் மதிமயக்
குற்றுப் பதடியென்றலைதரனன்றோ, நெடியவன் பிரம
னிந்திரன்முனோர் நித்தமுந்தாழ்ந்து சூழ்ந்தேத்து,
மடியவர்க்கெய்ப்பில் வைப்பெனுங் கருவூரானிலைப்
பசுபதீச்சுரனே. (சு)

நின்பதந்தனையே நினைந்துநைந்துருக நேர்ந்திடா
நெஞ்சமு நிலைக்கு, நின்பணிபுரியப் பொருந்துறுக்க
யமை நிகழ்ந்திடும் யாக்கையுநினது, நன்புகழ் வழு
த்த வாய்த்திடா நாவுநாயினேற்கென்கொனீ யமை

---

* உயிரெவற்றிற்கும் இறையென்பது "எஷாமீசே பசுபதி: பசூநாம் சதுஷ்பதா முதசத் விபதாம்" என்னும் யசுர் வேதக் கூற்றானும் "தஸ்மாருத்ரம் பசூநாமதிபதி:" என்னுஞ் சாமவேதக் கூற்றானுந் தெரிந்தாம். பறிநகர்=பொன்னகர். பறி? குழூஉக்குறி மொழி. பசுபதி, கருவூர், ஆனிலை முதலாய விவற்றின் காரணங்களை யெல்லாங் கருவூர் மான்மியத்துட் பரக்கக் காண்க.

த்தா, யன்பெனும் வலையி லகப்படுங் கருவூ ரானிலைப் பசுபதீச் சுரனே. (எ)

நம்பிவந் தொருவர் பசிதவி ரென்ன நவின்றிரப்ப வுமவரொதி ரே, வெம்புலா லுடம்பே வயிறெனநாளும் வேண்டுவ புசித்திழி நாய்போ, லிம்பரிற் றிரிவேனல தொரு பிடியுமீந் திடே னெங்ஙனமுய்வே, னம்புயாத னத்தன் போற்றுறுங் கருவூரானிலைப் பசுபதீச்சு ரனே. (அ)

புல்லுறு மொளியேற்றிரங்கி வந்தருளிப் பொலன் கழல் வாழ்வினையருளி, சொல்லுறுதெனவே யொறுக்க வல்லுநர் தாமுரைசெய்மூ வுலகினுமுண்டோ வல்லுறுமொருவன் வருத்தவே வாய்க்காலெனும் வழக்கிழுக்குமோ வியம, வல்லனேன் வீழ வுதைத்திடுங் கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (கூ)

அருண்மொழிப்பாவாம் பன்னிருமுறைக ளிருப்பவு மவற்றினை யொழித்தே, * மருண்மொழிச் சில

* சேக்கிழார் முதலாய ஆசாரியமூர்த்திகளா லருளப் பெற்றதேவார முதலாகப் பெரிய புராண மிறுதியவாவுள்ள பன்னிரு திருமுறைகளே திருவருட்பா, திருமுறை என்று முன்னருள்ள அருளாளர்கள் "ஞானோத்தரம்" முதலிய நூல்களினறைந் திருப்பவும், நமது கவிஞர் பெருமான் மீனாட்சிசுந்தரப் பிள்ளை அவர்கள் திருவிடைமருதூருலா என்னுஞ் சீரிய பிரபந்தக்கண் "வல்லானவனை யன்றி

கார் வழங்கு புன்கவியை மற்றவைக் கொப்புயர்வெ
ன்று, மிருண்மொழிக் கயவரினமகன்றுன் றனிணை
யடியேத்துநாளுளதோ, யருவுரு வருபரூபமாங் கரு
வூரானிலைப் பசுபதீச்சுரனே. (௰)

வஞ்சமே புரியுங் கொடுமனத்தெளிய மடந்தையர்
மயற்கடலாழ்ந்து, நெஞ்சமே மெலிந்திங்குழிதரா
தெனை நினிறைகழற் கன்பளுக்கிலையே, கஞ்சமே
வயன்மா லிந்திரன் முதலாங் கடவுளர் கைதொழு
தேத்து, மஞ்சமேன் மேலோங் க கன்பணைக் கருவூ
ரானிலைப் பசுபதீச்சுரனே. (௧௧)

தேம்பது மத்தம் பொருட்டினி துறையுந் திசை
முகப் பிரமனார் வாழ்வும், பாம்பணைத் துயில்கூர்
மாயவன் வாழ்வும் பண்ணவர்க் கிறையவன் வாழ்வும்,
வேம்பென வெறுத்தேன் கனவினும் வேண்டேன்
வேண்டனின் னடிப் பணி யொன்றே, வாம்பிரநதி
மேற்கரையமற் கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (௧௨)

ஞானசம் பந்த வள்ளன் முன்னுய நால்வரெங்
குரவன்மார் நவின்ற, தேனமர்தெய்வத் திருவருட்

---

மாலாதிய பசுக்களெல்லாம் பிரம மெனப்படுமே—வல்லார், திருவருட்பா வோலெகிற் சேர் பசுக்கள் பாவுந் திருவருட்பா வென்னச் செலுமே" என்று வெள்ளிடை மலை போற்றெள்ளிதி னுணர்த்தி யிருப்பவும், அப்பெயர் புனைந்த போலிச் சைவ மருட்பாக்களைக்கொள்ளுங் கயவரைக் குறித்தது.

பாவேற் றிடு செவி தனிற் சிறி யேன்சொ, லூனமிக் குடையபுன்கவியு றாத லொன்றுமோ வெங்ஙனமு ய்வே, னு னுகந்தன்பின் வழிபடுங் கருவூரானிலைப் பசுபதீச் சுரனே. (கங)

கழைமொழியுமையம்பிகை விழிகளிப்பக் கருணை மாநடம்புரி நினது, கழலிணைப் பணிசெய் விரதமே பூண்டு கழிக்குநா ளிழைத்திடாதந்தோ, விழலனே னிதமும் வேண்டுவ புசித்தே வெம்புலால் போர்த்த பாழுடலை, யழலிடையிடவோ வளர்த்திட்டேன் கரு வூரானிலைப் பசுபதீச்சுரனே. (கச)

கரவிலாநெஞ்சத் தொடுமுனைப்போற்றக் கற்றிலே னலது கற்றவர்பால், விரவிலேன் விரவியவர்விழை வோர்ந்து விருப்பொடு நக்கிலேனல்கிப், பரவிலேன் பரவிப் பணிகிலேனதனாற் படிறனே னின்னருள் பரு கா, தரவின்வாய்த் தேரையாவனோ கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (கரு)

* நினையலாதணுவு மசைதராதென்ன நிகழ்த்து நின் மறைமொழி மெய்யேல், வினையென வொன்றிங்

---

* இது சாமவேதத்திற் றலவகாரசாகை யென்னுங் கேன த்திலே, பெருமான்றுரும்பை நட்டுக்காட்டிய சரிதத்தைக் குறித்தது. "அவனன்றி, யோரணுவு மசையாதெனும் பெரிய வாப்தமொழி" என்றார் சித்தாந்த பரபினரும்.

செய்திய விதமுமேவு மவ்வினை வழியேசென், றினை
வுறு விதமும் யாண்டிருந்தெம்மை யெய்தின வியம்பு
திவெளிபேற், கனையினு மினியவண்ணலே கருவூரா
னிலைப் பசுபதீச்சுரனே. (கசு)

* நவின்மறை மூன்றுணடுமறைதன்னி னண்ணு
மேழ் காண்டத்தினடுவி, லவிர்தரு காண்டத்தணைந்த
சங்கிதை யேழனினடுச் சங்கிதைதன்னிற், சவியுறு
மூதலீரெழுதித்து நள்ள மருந்தனி மனுப்பொருளை
னுநின்னை, யவலமேன னறிதற்கெளியதோ கருவூரா
னிலைப் பசுபதீச்சுரனே. (கஎ)

* இருக்கு, யசுர், சாமம் என்னும் வேதமூன்றனுள் நடு மறையாகிய யசுர் வேதத்தில் (நூற்றொருசாகைகளில் நடுவணுயுள்ள) ஐம்பத்தோராஞ் சாகையின் நடுவேயுள்ள போதாயன சாகையில் எழு காண்டங்களுள் நடுக்காண்டமான நான்காங்கண்டத்தினடுவே யமைந்தது சகல வேத சீவமணியான சிவ என்னும் பஞ்சாக்கரமேயாம் இதனையே மாண்டூக்கியம், அதர்வசிரம், தைத்திரீயகம், முக்திகம் முதலிய வேத சாகைகளும் நன்கு சிறப்பித்தன. இவ்வுண்மையினையே "ருத்ரோஷ்ஷ புண்ய மிவபஞ்சக மக்ஷராணும்" என்று நெருப்புச் செறிந்த விருப்பு முக்காலியின் கணேறித் தாபித்தருளினர் அரதத்தாசாரிய சுவாமிகளும். இங்ஙனந்திருநாகைக் காரோண புராணம், திருக்குடந்தைப் புராண மென்பவற்றுளோதினர் நக்கவிஞர் பெருமானும்.

வருத்துறு துயரமெனைத்தையுமாய்க்க வல்லனும்
வகுக்கும்மச்சகமும், பொருத்திமிக் கருளினிருக்க
வல்லவனும் பொருந்து நீயேயெனவேத, * முருத்
திரனுயர் சங்கரனெனும் பெயரானுணர்த்தவு முனை
யடைக்கேதத்தற், கருத்திலேயார் சிறிது மாக்கிலேன்
கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (௧அ)

நின்றிருவடிக்கே நிறைந்த பேரன்பு நின்பணியே
புரிசெயலு, நின்றிருப்புகழே பலப்பலவாக நடமொடுத்
தேத்துறநேர்பு, † நின்றிருவருளாற் கிடைக்கிட
லன்றி நெறியிலேன் றிறத்தகவாமோ, வெஞ்சூரற் கிர
ங்கிப் படைப்பருள் கருவூரானிலைப் பசுபதீச்சுரனே.

‡ பண்டுநீ யெதிரே யிருப்பவும்பிரமன் பார்த்தில
னரிசொல வுணர்ந்தான், றிண்டிறற் குலிசப்படைய

---

* உருத்திரன் துன்பக்கடலினின்றும் நீக்கிக் காப்பவன்
"இன்னலங் கடலுட்பட்டோர் யாரையுமெங்கு நீரா-லுன்
னரும் பரமமூர்த்தி யுருத்திரனெனும் பேர்பெற்றான்;" என்ற
து கந்தபுராணம். சங்கரன்—சம், சுகத்தை. கரன் செய்பவன்

† "அவனருளாலே யவன்றாள் வணங்கி" எனத் திரு
வாசகத்திருவருட்பா வருளலானும், சிவதத்துவ விவேகத்து
உரையானுந்தெளிக.

‡ பிரமன் விட்டுணு அறியாததைக் கூர்ம புராணம், சூத
சங்கிதை முதலியவற்றினும், இந்திரன் தேவியாரானுணர்ந்
தானென்பதைக் கேனோபநிடதத்துங் கண்டு கொள்க.

னுமொரு மாதேவியார் தெரித்திடத் தெரிந்தான், வண்டுழாய் மாயோன் பிரமனோடின்றுண்மையறீர்ந் தொர்ந்தனனாகி, வண்டனையெளிமைய னறிவனோ கருவூ ரானிலைப் பசுபதீச்சுரனே. (௨௰)

எனையலா துளவா றடிமை செய்குநர் பிற்கெண்ணில் பற்பலருளரெனினு, முனையலாதடி யேற்கிறங்கிவந் தருளி வுய்வுதந்திட வலருளரோ, *தனையலாற் பிரம மென்பதொன் றிலை யிச்சகமெலா மித்தையேயென்பா, ரனையபாவகர் தாமணுகருங் கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (௨௧)

† எவ்வெவ ரெவ்வெவ்வுருவினி லெவ்வாறெவற்றினை யெண்ணியேத்துவரோ, வவ்வவர்க் கவ்வவ்வுருவினிலவ்வா றமர்ந்தவற்றினை யினிதருள்வான், பவ்வரு

---

* இவர் மாயாவாதிக ளெனப்படுவோர். நெஞ்சு விடுதூ தென்னுஞ் செந்தமிழுபநிடதக்கண் "தாம்பிரமங் கண்டவர் போற்றம்மைக் கண்டாங்கதுவே. நாம் பிரமமென்பவர் பானண்ணுதே" என்றார் முள்ளிச்செடிக்கு முத்தியருளிய முதல்வனாரும்.

† இதனை எவ்வுருவில் ‡ யாரொருவருள் குவாருள்ளத்து அவ்வுருவாய் நின்றங்கருள் கொடுப்பன்" என ஆதியுலாவும், "யாதொரு தெய்வங்கொண்டீரத் தெய்வமாகியாங்கேமா தொருபாகனார் தாம் வருவர்" எனச் சிவஞான சித்தியும் அறைகின்றது.

ஞ்சயின்ற பகவனென்றனையேப் பழமறை பகருமவ்
வருமை, யவ்விய முனடையாரறிவரோ கருவூரானிலைப்
பசுபதீச்சரனே. (உஉ)

விழைகுவார் விழையும வைபெலாமீயும் விமலனீ
யென்பது முன்னோர், *மழுவழற்காற்றுத முதவாரி
யினைவழங்கினையென்பது மெய்யேல், வழுவினின்ன
ருள் வேட்டமுமெனக்கிரங்கிவந்தவை தந்திடா யென்
னே, யழல்வளர்த்த மரர்க்கவிதருங் கருவூரானிலைப்
பசுபதீச்சரனே, (உ௩)

† விடையதாய் மேவித்தாங்கியுந்தனது விழிபெய
ர்த்தருச்சனை புரிந்தும், புடையினிற்றேவியென வினி
திருந்தும் புரமெரிசெயக்கணையாயு, முடைதராப்பே
ரன்பு ஞற்றநிற்கம்மாலொருவற்கே யன்றியெம்போ

---

* மழவு என்னும் இளமைப் பெயர், ஈண்டாகு பெய
ரானே உபமன்னிய முனிவரைக் குறித்தது. அவர் பசிதணி
ப்பான் பாற்கடலீந்தருளியதை வடமொழிச் சிதம்பரமாகா
த்மியத்தும், உபமன்யுபக்தவிலாசத்தும், கோயிற் புராணத்
தும் பரக்கக் காண்க.

† விடையதாகித் தாங்கல் - திரிபுர சங்கார காலத்து.
புடையினிற்றேவியா யிருந்தமையை-"அறியலாற் றேவியில்
லையையனையாரனுக்கே" என்னும் அருள்வாக்குத் தெரித்த
"பிறைதங்கு சடையானை வலத்தேவைத்து" எனவும "குழ
னிறவண்ணனின் கூறுகொண்ட தழனிறவண்ணனன்றோ

ல்வா, ரடைவினன் காற்றவமைவதோ கருவூரானிலைப்
பசுபதீச்சுரனே. (௨௪)

*தரைபுனல னல்கால்வா னுயிர் தபனன்றண்மதி
யன்றிவேறுக, வுரைசெயிஞ்ஞாலமிலை யவையாவுமு
ன் பெருவடிவமெய்யதனாற், புரைதவிர்நீயே பொருந்த
திட்டாதாப்பொருளென மறைகளும்புகலு, மரிலுறு
மூர்க்கரறிவரோ கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. ௨௫.

† மணியினைக் கழீஇப் பரல்கொளன் மானவன்
பிறப்பறுக்க நின்றொருவிப், பிணிமலநூறவாப் பிறப்
பிறப் புடைப்புன் பேய்த் தெய்வநெறி கொடு பிதற்
றுந், துணிவுடைத் தூர்த்தப் பிணக்க ரெவ்வாற்றாற்
றுணித்திட வல்லர் மற்றதனை, யணிமதிற் சிகரப்பல
செழுங் கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (௨௬)

---

நகாம் விழுநனிமலை சிலைவளை செய்தங்கழனிறவம் பதுவான
வனே, எனவும் நாலாயிரப் பிரபந்தமுங் கூறியது. காள
மேகப்புலவரும் "கடம்பவனச் சொக்கருக்கு" எனவொரு உஞ்
செய்யுளானுந் தெரித்தனர்.

* அதிட்டாதாவெனப் புகன்றமை "ப்ருதிவ்யோபவ"
எனவரு உம்வேத வசனத்தானும். காரைக்காலம்மையார்
திருவந்தாதியில் " அவனே யிருசுடர் பாராகாசமாவான்"
எனவரு உந்திருவருட்பாவானுமுணரற் பாலதாம்.

† இதனுண்மை "யதாகாசம்" என்றற்றொடக்கத் தசவே
தாசு யதாச்சுருதி வசனங்களானுணர்க.

* பத்தெனப் புகனல்லிலக்கணத்தோடும் பணி செய் மெய்த்தொண்டர்க்கேயல்லால், பொய்த்த புன்னெறிகொண்டு பணிகவர்வான் போந்தவோர் விபண்டகவேடற், கித்தலத்திடை முன்னருள்புரிந்தனையென்றியம்புதல் கேட்டுனையடைந்தே, னத்தவென்றமரரேத்துறுங் கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (உஎ)

† நின்னருளொன்றே பயன் முதற்றேவர் நிலையினிற் பொருந்தி முதலொழிவு, நன்மையமாக நடத்துவதன்றிச் சுதந்தரமவர்க்கிலையென்றே, பொன்னவன்றன்னை மக்களைப்புரவான் பூவயன்றன்சிரப்படையா, னென்னதாவறிந்தே னரும்புகழ்க் கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (உஅ)

நிதியினை விழைந்து நிலத்தினை விழைந்து நெஞ்சலாவுறும்பலப் பலவாம், ‡ பதியினை விழைந்தும் பலை

---

* பத்திலக் கணமிவையென்பது பிரமோத்தர காண்டம், உபதேசகாண்டங்களிற் சொல்லப்பட்டது. பணிசெய்வார்க்கன்றிப் பணிகவர்வார்க்கும் அருளுங் கருணையுடையானென்னும் நயந்தோன்றுமா றுணர்க. பணி—தொண்டு அடுத்த பணி என்பது ஆபரணம்.

† (16) செய்யுளின் கூற்றையே இச்செய்யுளும வலியுறுத்தாநிற்கும்.

‡ பலப்பலவாம் பதி. என்றது போகபூமிகளாம் ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம், ஏமதவஞ்சம் ஏமவஞ்சம் ‘உத்தர

மார்கலவிப் பண்பினை விழைந்துமிக் குழல்வேன், கதியினை விழைந்தன் கழற்பணியாற்றிக் கடுந்துயர் கடக்க மாட்டுவனோ! வதிநெடிலாம் பேரவை தொழுங் கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (உகூ)

குற்றமுங் குணமாக் கொண்டருள் புரியுங் குலவுநின் குரைகழற்கல்லான், மற்றொரு தெய்வந் தொழுக்கரங்கூப்பா மனநினைந்திட நனிதுணியா, துற்ற கண் காணக் கூசுநாத்துதிப்பவொத்தெழா வுண்மையீதுண்மை * யற்றவர்க்கற்ற வண்ணலே கருவூரானிலைப் பசுபதீச்சுரனே. (௩௰)

கருவூர் பசுபதீசுரர் பாமாலை
முற்றிற்று.

குருவம், தேவகுருவும். சுவர்க்கம, பவணலோகம், சேடிநகர், பரமபதம், விண்டுபதமென்பன. அதி நெடிலாம் பேர் அவை தொழும் என்றது ஆ=தீ. என்பவைகள் பூசித்த சரிதத்தைக் குறித்தது. ஆ காமதேனுவாகிய பசு. தீ அக்கினி தேவன் சாதிபற்றி அஃறிணையாகக் கூறினும்.

* "அற்றவர்க்கற்றவன்(, இது திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய முதற் குறிப்பினையுடைய திருவாலவாய்த் திருப்பதிகத்தையாம். இதனைத்தாயுமானாரும் எடுத்து வீதந்துள்ளார். அற்றவர்க்கு அற்றவன் - இல்லென்பார்க்கில்லாதவன் எனவும், மலம் அற்றவர்க்குத் தானும் வேறல்லாதவன் எனவும் பொருளுரைத்துக்கொள்க.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## திருவாளிலைநாதர்

# போற்றிப்பதிகம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தேவர்கடேவேபோற்றி, சிவபரஞ்சுடரே போற்றி.
மூவருமேத்தநின்ற முக்கணெம்பெருமான் போற்றி
மேவரும்பொருளேபோற்றி விலங்கல்வில்லுடையாய்
போற்றி, * யாவினஞ்சுகந்தாய்போற்றி யாளிலைப்பர
மாபோற்றி. (க)

† வர்சநற்றுளவன் வேண்ட மலரணைச் செல்வன்
றன்னை, மாசகன் மைந்தனாக வழங்கினைய யன்பின்

---

* ஆவினஞ்சு-பஞ்சகௌவியம்.

† ஒருகற்பத்தில் விட்டுணு சிவபெருமானை வேண்டிப்பிரமனைப் பெற்றானென்றும், இன்னொரு கற்பத்திற் பிரமன் அவ்வாறே சிவபெருமானை வேண்டித் திருமாலைக் குழவியா

வேண்டக், கேசவன்றன்னை யீந்தாய் கிளர்தரு மைந்தனாக, வாசகல் கருவூர் மேயவானிலைப்பரமா போற்றி, (௨)

வழிவழிச்சோழர் சேரர் வந்திக்கு மணியே போற்றி, கழியுணர் வுடையாருண்ணும் கற்பகக்கனியே போற்றி, யிழிதகை யெளியனேற்கு மின்னருள் சுரப்பாய் போற்றி, யழிவிலாப் பொருளே போற்றி யானிலைப்பரமா போற்றி. (௩)

வித்துமாய் முளையுமாகி விரையுமாய் மலருமாகிச், சத்துமாய்ச் சித்துமாகித் தாவிலாவின்புமாகித், தத்துவமெனைத்து மாயத்தத்துவாதீதமாகி, * யத்துவா மேனியாய வானிலைப்பரமா போற்றி. (௪)

---

யப் பெற்றானென்றும் வாயுசங்கிதை கூறுகின்றது. "சீதர னிரந்து வேண்டச் செழுமலர்த் தவிசுளானை-யாதர மைந்தனாக வருளினையனையான் வேண்டத்-தாதவிழ்துளாயினானைத் தந்தனை மைந்தனாக' என்று உறையூர்ப் புராணமு முரைத்துவலியுறுத்திற்று.

* அத்துவா-சுத்தாத்துவா, மிசிராத்துவா அசுத்தாத்துவா என்னும் ஆறத்துவாக்களை. அவை மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலையென அறுவகைப்படும். அவையிற்றை மேனியாக்கொண்ட முறைமையைச் சுப்பிரமணிய பராக்கிரமத்து விரிவாய்க் காண்க.

*பதிபசுபாச மென்னப் பகர்பொருண் மூன்றின் றன்மை, விதியுளி யறவோர்க்கங்கை விரல்களாற்றெ ரித்தாய் போற்றி, மதிபணிவேணி முக்கண் வள்ளலே போற்றி நாளு' மதிதிகளுளத்திற்றாங்கு மாணிலைப்ப ரமா போற்றி. (ரு)

அடிமுடிய யன்மாறேட வழற்பிழம்பானாய் போ ற்றி, கடிகமழ் கொன்றையந்தார்க் கண்ணுறு தற்பி ரானே போற்றி, பொடியணிமேனி வாய்ந்த புண்ணி யப் பொருளே போற்றி, யடியனேற்கின்ப நல்குமா ணிலைப் பரமா போற்றி. (சா)

ஈசனே போற்றி யெங்களிறைவனே போற்றி யம் மை, நேசனே போற்றி மன்றினிருத்தனே போற்றி பாவ, நாசனே போற்றி யார்க்கு நாதனே போற்றி வேத, வாசனே போற்றி தெய்வ வாணிலைப் பரமா போற்றி. (எ)

மண்புனல னல்கால்வான மதிகதிரான்மா வென் னும், பண்புறுமூர்த்த மெட்டாய்ப்பரந்தெங்கு நின் றாய் போற்றி, கண்புனல்வடித்து நெஞ்சங் கரைந்து

---

* பதி, பசு பாசமென்னு முப்பொருளியல் பெல்லாந்தக் ஷிணாமூர்த்தியா யெழுந்தருளியிருந்து சனகாதி நால்வர்க்கும் சின்முத்திரையானே துறந்துத் தெளித்தருளிய சரித்திரத்தை யுணர்த்தியது.

றுகண்பர்க்கென்று, மண்மியலின்பப் பேரானிலைப் பரமா போற்றி. (அ)

விரிதரு புவனமாக்க விரைமலர்ச் செல்வனையும் பிரிதாரத தனைக்காக்கப் பின்னைதன் கேள்வனையு, மிரி தனுற்றனைத்துமாய்க் கனியனுருத்தி ரேசனையு, மரி யமற்றிவற்றின் மேலா மானிலைப்பரமா போற்றி. (௯)

*மண்ணிலைந்தாகி நீரினான்கதாய் வன்னிதன்னி, லெண்ணுறு மூன்றதாகி மாருதிதனி லிரண்டாய், விண்ணிலொன்றாகி மற்றை விளங்குமெய்ப் பொருளு மாகு, மண்ணலே கருவூர்மேய வானிலைப் பரமா போற்றி. (௧௰)

## திருவானிலைநாதர் போற்றிப்பதிகம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

* மண்ணில் ஐந்தாவன—சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம். நீரில் நான்கு—சத்தம் பரிசம், உருவம், இரதம். வன்னியின் மூன்று—சத்தம், பரிசம், உருவம் என்பன. வாயுவில் இரண்டு—சத்தம்—பரிசம். விண்ணில் ஒன்றாவது—சத்தம். "வெளியிடையொன்றாய் விளைந்தாய் போற்றி" என்றற்றொடக்கத்தவாய்த் திருவாசகச் சுருதியுஞ் செப்பிப் போதல் காண்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானசம்பந்த குருப்யோநம.

# சௌந்தர நாயகி தசகம்.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

முனமொரு நன்மக வழுதற்கிரங்கி யருட்பெருமான், முழங்கும் பாற்கடறனை முகந்து நனியளித்தான், பினுமொரு நன்மக வழுதற்கிரங்கி யருட்டாய் நீ, பிறங்கு திருஞானப்பால் பெய்தோர்வள மீந்தா, யெனிலினைய மகவுளது வீந்தவர்கட்கெண்ணி, லேற்று மிகுபெரும் புகழொடெவ்வுலகு முய்யத், தனிகெழுசைவத் துறையுந்தழைவித்த துரையாய், தலத்துறுயர் கருவூர்வாழ் சௌந்தரநாயகியே. (௧)

*போற்றுறு நல்லுயர் போகசத்தியென நாளும், பொருந்துமதனுன் மனையாய்ப் பொக்கமகனின்பாற்,

---

* இவ்வரும் பொருளைத் திருவாசகம், திருக்கோவையார், சிவஞானசித்தி யென்பவற்றினும், "கனகமார் கவின்

றேற்றளித்தலை லனையாய்த் துன்னிடவோர் கால்
முன், றுளங்கிடுமாறு தித்தலினூற்று களிரமக்கைய
ளாய், வேற்றொரு காற்பின் வரலான்மேவ வதின்மு
ளைக்கும் விக்கமகனிற்றங்கை மகளென விமலற்காகும்,
சாற்றரு நின்றிரு விளையாட்டியா முணருந்தரமோ,
தலைத்துளயர் கருவூர்வாழ் சௌந்தரநாயகியே. (உ)

எண்ணில் பலவுயிரெவையு மீன்றவணீயே யென்
றொழியின் மறையுமாகம முமியம் புறுநவியல்பாற்,
கண்ணுறு மனையாவுமுன காண்முளையிற் காணக்,
கவணியர் கோன்றனக்கு மட்டுங்களிப் பினெடுத்த
ணைத்தே, புண்ணியவெண்டிரு ஞானப்பாலதனைப்பு
கட்டிற், பொதுநோக்க மென்பதுணக்கியாண்டுள தம்
மகவுந், தண்ணளியிற்றமிழ முதந்தந்தெமைத் தேற்
றியதே, தலைத்துளயர் கருவூர்வாழ் சௌந்தரநாய
கியே. (௩)

முடியின்மிசையென் கொலொருமாற் றவளைத்தா
ங்கி, முகப்பினிருந்திடுமையென முனிந்து பிணங்கு
ம்போ, தடியின்மிசை வீழ்ந்து பணிந்தாயிழையே
வதுநீரணங்கலவென்றவன் சொலன் மெய்யன்றென

—மனைசெய் மன்றி—னனகநாடகஞ் செய்வார்கமெமன்னை
வி தாய் தங்கை மகள்" எனவரூ உஞ்சிதம் பரசெய்யுட் கோ
வையினு முணைக்கப்பட்டது. விரிவஞ்சி விடுத்தாம்.

நன்குணர்ந்து,நெடிதுமுள மகிழ்தனி நினைவுழியவ்வி
றையு, நேரிழையும் வணங்குமதே போதுமெனப்போ
லுங், தடியில்கதிர்மேய்ந்தெருமை தருநிழலிலுறங்
குந், தலத்துளயர் கருவூர் வாழ் சௌந்தரநாயகியே.

கண்பரித்துப்பூசி நறுங்காதலியை யீந்து, கான்மு
ளையைக்கறியெனவே நனிசமைவித்தூட்டிப் பண்புறு
சுற்றத்தினொடு பாலுண்மக வெறிந்து, பயந்த பிதாத்
தாடடிந்து பகரொரு பூமோந்த, நண்பில்பிழையோ
ர்ந்தொரு பெணுசிகரமரிந்து நவிலுமினுஞ் செயற்க
ரிய செய்தவர்க்கே யருள்வான், றண்பிறைசூடுன்
கொழுநனென்றுனையே சார்ந்தேன், றலத்துளயர்
கருவூர்வாழ் சௌந்தரநாயகியே. (௫)

*பரையாதியிச்சை பரஞானமுட னொளிரும்,
பாங்குறுநற் கிரியையெனும் பஞ்சவிதமான, வுரை
செயுயர் சத்தியெனவொருமுதல்வற்காகி, யோங்கு
திருவைந்தொழிலு முறநடத்திப் பின்னும், விரைமல

---

* பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரி யாசத்தி யென்னும் ஐவகைச் சத்திகளாய் நின்று இறைவி படைத்தன் முதலியவைவகைத்தொழிலையு மிறைவனுடன் றாதான்மியமாய் விளங்கிச்செய்யுமியலுணர்த்தியவாறு. தாதான்மியமாய்ப் பிரிவற நிற்குமுண்மைக்குக் கண்ணொளி கதிரொளிகளும், இசையும் பண்ணும், சுவையுந்தேனு மூவமையாமாறுக் கண்டுகொள்க.

ர்க் கண்ணொளியருக்கன் வியனிசை பண்சுவைதேன்,
விரிகலைத்தண்மதியெனை வவ்விறைவனுடன் பிரியாச்,
சருவபரிபூரணி நின்றாருணார் தற்கெளிதோ, தலத்
துளயர் கருவூர்வாழ் சௌந்தரநாயகியே. (சு)

* இருவகைய வாழ்வுமரு ளிருகணிலமென்று
லெண்ணுமலொன்றழிக்கு மொண்மருளிர் நங்கை
யின், மருவலரொளுதழிக்கு மற்றிதுவன்றியு நப். வடி-
விலொன்று வெப்புசெயு மாற்றவளோடொன்று, மரு
வவுரைந்திடுமிதன்றன் வலிமையாவின்னே, மாற்று
வென்றிரு சுடரை யன்சிறை செய்திடவோ, தரும
முதலவன் விழியைத் தடங்கை கொடுபுதைத்தாய்
தலத்துளயர் கருவூர்வாள் சௌந்தர நாயகியே (எ)

பூரணி புராதனி புராந்தகி புராணி, பொருந்து
† சுத்த தயிரிணிபாவனை தவநீ நவனீ, ஆரணிகாலோ
ணினி சாமுண்டி தர்க்காவேணி, யசனிபிபாத்திரி

---

* இருவகை வாழ்வு: கல்வி செல்வம். இவற்றைக்கொ
டுக்கும் நாமகள் பூமகள் இருவரும் அம்மையாரது இருகண்க
ளாகலின் அவ்விருகண்கட்கும் வீடாயவெண்டாமரை செந்
தாமரைகளைச சந்திரன் அழிப்பானென்பது முதலடியின்
பொருள். நங்கையின் மருவு அலர்: நமது (தேவியின்) திரு
க்கரத்திற் பொருந்திய குவளைமலரை. அதைச சூரியன் அழி
க்கின்றானென்றபடி,

† இச்செய்யுளிற் கூறப்பட்ட அம்மையார் தந்திருப்பெயர்
களெல்லாம் ஆருதாரங்களுட் சுவாதிட்டானதி ஆக்கினைச்

சாணையற் பாசிகமலை, சீரணிபாநந்தி சிவசுந்தரிபெண் றுனையே, தினமு நனிபுகழ்ந்தேத்துந் திறமருளிச்செய்தே தாரணியினெனையாளுங் கடமை நினதன்றோ, தலத்துளாயர் கருவூர்வாழ் சௌந்தரநாயகியே (அ)

அங்கையினி னன்கமரும பைங்கிளியின் மொழியோ, வாறுமுகம்பெற்ற கொற்றத்தரும் குழவி மொழியோ, * செங்கையு வந்தடு சிவ சங்கரனுருட, நீரத்திடவே யாததியோடு செபபுறுமின மொழியோ, நஙகையுன திருசெவிககு நாயனையேன் புன்சோ, னவையகனீ மற்றிரகக நண்ணுமதெவ்வாறோ, தங்கை மனையனை புதல்வியென விறைவர்காருந, தலத்துளுயர் கருவூர வாழ் சௌநதரநாயகியே. (கூ)

அவனிமிசையடிநாயே னநதோவெந்நாளு, மடைபலவாமலலலெலலா மரவரசனாலு, நவிலவமையாதே மற்றவை யாவுமறிந்து, நனிபறியாய்போன்றேநீ யிருபபது மற்றெளிமையன, பவவினையே நினதடியார் பழித்துனையே சுவரோ, பரிபாககாலமின்றோ வரந்திரக்கமிலையோ தவராஜயோகர் மகிழ் சாமபவியேசாற்றாய், தலத்துளுயர் கருவூர்வாழ் சௌநதரநாயகியே. (ய)

## ஸ்ரீ சௌந்தரநாயகி தசகம் முற்றிற்று.

---

தமாகவுள்ள ஆதாரபதுமங்களினதி தேவதைகளாய் நிற்குஞ் சத்திகளை குறிக்க நிற்கும்.

* செங்கை, திருவாதிரை நாள்.

## ஷை அம்மையார் நடுவெழுத்தலங்காரம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

* சிரம்பரிதூது நூறு கைதொன்மைதிறல் கண,
மென்னுமோ ரெட்டுத், தரம்பெறு மொழியினடு
வெழுத்தாற் சமைந்திடு திருப்பெயர் தரித்தே
நிரந்தரமா யெவ்விடத்தினுமிருக்கு நிலையினொளி
னுந் தனிநிலைப்பா, ரந்தை யெம்பவ நோயகற்றிடக்
கருவூரமர்ந்தொளிரன்னை தாழ்பணிவாம்.

## அலங்காரவதியம்மையார்.

மணமலி கமலைப்பொருட்டினி துறையும்வரன்மு
தன் மூவருமியற்றுந், தணிவறுந்தொழிலோர் மூன்
றிற்குநாதனே தலைவியென்றியாவருந் தேறமணிவ
டஞ்சிருக்கும னவரிசமூவேன் மலர்க்கரத்தெழில்
பெறத்தெரித்தே, யணியதிற் கருவூர மரலங்காரவம்
மைதனடி பணிந்துய்வாம்.

முற்றிற்று.

ஸ்ரீ மெய்கண்டநாதன் றிருவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

---

*சிரம். பரி, தூது, நூறு கை, தொன்மை, திறல், கணம், என்பவற்றின் பரியாயப்பெயர்களான சேசம், இவுளி, சந்து, சதம், கரம், அநாதி, செயம் முகில் என்னுமிவைகளில் நடு வெழுத்துக்களைச் சேர்க்கச் சவுந்தரநாயகி யெனப்போதல் காண்க.

சிவமயம்.

## இந்நூலாசிரியரியற்றிய நூல்கள்

### அச்சிற்பதிப்பித்தவை.

| | | | |
|---|---|---|---|
| திருவானைக்கா பதிற்றுப்பத்தந்தாதி | 0 | 2 | 0 |
| திருவையாற்று நவமணிமாலை<br>சப்தஸ்தலத்தோத்திர வெண்பா. | 0 | 1 | 0 |
| திருவுறந்தை இரங்கன் மாலை.<br>௸ இரட்டைமணிமாலை.<br>௸ காந்திமதியம்மை கட்டளைக் கலித்துறை. | 0 | 1 | 0 |
| திருக்கற்குடித்தோத்திரப்பா. | 0 | 1 | 9 |
| சோமசுந்தரஸ்தவம். | 0 | 0 | 6 |
| கருவூர் பசுபதீசுரர் பாமாலை.<br>திருவானிலைநாதர் போற்றிப்பதிகம்.<br>சௌந்திரநாயகித் தசகம். | 0 | 1 | 6 |

### அச்சிற்பதிப்பிக்காதவை.

உறையூர் மான்மியம் (வசனம்)

திருவானைக்கா புராணம் ௸

R. தேசிகஷண்முகமூர்த்தி பிள்ளை,

சைவசித்தாந்த சபை.

உறையூர்.